# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 20.07.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்:**

பொதுவாக அல்லாஹ்வுடைய அருள்களையும் வெகுமதிகளையும் பார்க்கிற போது நம்மில் பெரும்பாலாரின் நாவிலிருந்து அல்லாஹ்வின் அருளைப் பார்த்து அதனைக் குறிப்பிடும் வகையில் அல்ஹம்துலில்லாஹ் வெளிப்படுகிறது. அவருக்கு அல்ஹம்து என்பதன் ஆழிய பொருள்கள் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி ஒரு குறிப்பிட்ட சுற்றுச்சூழலில் வசிப்பதன் காரணமாக ஒரு பகட்டுக்காகவாவது அல்ஹம்துலில்லாஹ் கூற வேண்டும் என்ற உணர்வு உள்ளது. மிகவும் குறைந்த அறிவு படைத்தவர்களுக்கும் கூட இந்த வார்த்தையை கூற வேண்டும் என்ற உணர்வு உள்ளது. இந்த சொல் அல்லாஹ்வை புகழ்வதன் பக்கம் சுட்டிக் காட்டுகிறது.

எனவே ஓர் அஹ்மதியின் வாயிலிருந்து மகிழ்ச்சியான தருணத்தில் – இறை வெகுமதி இறங்கும் தருணத்தில் அல்லது ஏதாவதொரு வழியில் இறைவன் எனக்கு உதவி செய்து கொண்டிருக்கிறான் என்று உணரும்போது அல்ஹம்துலில்லாஹ் கண்டிப்பாக வெளிப்படுகிறது. ஒவ்வொரு சொந்த மகிழ்ச்சியாக அது இருக்கலாம் அல்லது ஜமாஅத் ரீதியான அல்லாஹ்வின் அருளாக இருக்கலாம். அல்ஹம்துலில்லாஹ் என்ற சொல் இதுபோன்ற தருணங்களில் கண்டிப்பாக ஓர் அஹ்மதியின் நாவிலிருந்து வெளிப்பட வேண்டும். ஆனால் இந்த சொல்லைப் பயன்படுத்துவதால் சொல்பவர்களுக்கு இன்னும் அதிகமான பரக்கத் கிடைக்கக் காரணமாகிறது. அவர் சிந்தித்து அதன் ரூஹ் –ஐ புரிந்து கொண்டு அவ்வார்த்தையைக் கூற வேண்டும்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள். நாம் இக்காலத்தின் இமாமை ஏற்றுள்ளோம். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மஹ்தியை ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த ஈமானின் காரணத்தால் அல்ஹம்துலில்லாஹ்வின் பொருளோ அல்லது எந்தவொரு திருக்குர்ஆனின் வசனங்களின் பொருளின் ரூஹ் –ஐ விளங்குவது நமக்கு சிரமமல்ல. ஆனால் நிபந்தனை என்னவென்றால் நமக்கு இதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து அறிவைப் பெற்று நமக்கு ஒளியூட்டியுள்ளார்கள்.

அல்ஹம்துலில்லாஹ் என்ற சொல்லுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு வகையில் விளக்கம் கூறியுள்ளார்கள். நான் இப்போது ‘ஹம்து’ என்ற சொல்லின் சுருக்கமான விளக்கத்தை அவர்களது வார்த்தைகளில் விளக்குகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹம்து என்பது ஒருவரது சிறந்த செயலைப் பாராட்டும் வகையில், பாராட்டுவதற்கு தகுதி படைத்தவரைப் பார்த்து கூறப்படுகின்ற சொல் ஆகும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். ஹம்து என்பது ஒருவர் தனது சுய விருப்பத்தால் ஒருவருக்கு வெகுமதி அளித்திருந்து அதனைப் பாராட்டும் பொருட்டு கூறப்படும் புகழ்ச்சியாகும். மேலும் தனது விருப்பத்திற்கு ஏற்ப அந்த வெகுமதியை வழங்கியுள்ளார். ஹம்து (புகழ்ச்சியின்) உண்மை நிலை – யதார்த்தத் தகுதி அவனுக்கே உரியது. அதற்கு தகுதியானவன் எல்லா அருள்களின் ஊற்றாக இருக்க வேண்டும். தனது அகப்பார்வையினால் ஒருவருக்கு உபகாரம் செய்பவனாக இருக்க வேண்டும். அறியாமலோ அல்லது ஏதேனும் நிர்பந்த சூழ்நிலையின் காரணத்தாலோ அந்த உபகாரத்தை செய்பவனாக இருக்கக் கூடாது. இந்நிலை நன்கறிந்தவனும், அகப்பார்வையுடையவனும் ஆகிய இறைவனிடம் மட்டுமே ஹம்தின் இந்த பொருள் அளவிலான தகுதி காணப்படுகிறது. அவனே கருணையாளன் ஆவான். முதலிலும் கடைசியிலும் உள்ள எல்லா அருள்களும் அந்த இறைவனிடமிருந்தே கிடைக்கிறது. இவ்வுலகிலும், மறு உலகிலும் எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் அல்லாத மற்றவர்களைப் புகழ்வதும் கூட அவனிடமே திரும்புகிறது.

இந்த ஹம்து என்ற சொல் இவ்வளவு பொருள்களையும் பொதிந்துள்ளது. இவ்விசயத்தை முன்னிறுத்தி அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால், அதுவே உண்மையான ஹம்து ஆகிறது. ஒரு மூஃமின் இறைவனுக்கு இதனையே செய்ய வேண்டும்.

திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் இந்த ஹம்து என்ற சொல் அல்லாஹ்வுடைய புகழின் பக்கம் கவனமூட்டியவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த மேற்கோளின் அடிப்படையில் கூறுவேன்; விளக்கம் அளிப்பேன். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹம்து குறித்து கூறிய கருத்துக்கள் இதுவாகும்.

ஹம்து என்பது புகழுக்குத் தகுதியான ஒருவர் செய்த சிறந்த செயலுக்காக அவருக்கு வழங்கப்படும் புகழ்ச்சியாகும். மனிதர்களிலும் பலருக்கு பல வகையில் புகழ்ச்சி செய்யப்படுகிறது. ஆனால் அவனே புகழுக்குத் தகுதியானவன் ஆவான். அல்லாஹ்வைத் தவிர அதற்கு தகுதியானவர் வேறு யார் இருக்க முடியும்? எனவே ஒரு விசயத்தை நினைவில் கொள்ள வேண்டும். எல்லாப் புகழ்ச்சிகளும் அல்லாஹ்வுக்கே உரியன. காரணம் அவனே புகழ்ச்சிக்கு எல்லாரையும் விட அதிக உரிமையாளன் ஆவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வெகுமதிகள் வழங்கக்கூடிய அந்த இறைவன் தனது சுய விருப்பத்தால் வெகுமதிகளை வழங்கினான். அல்லாஹ்வுடைய வெகுமதி இறங்கும் போது, வெகுமதியை பெறுபவருக்கு அவரது அமலை விட அதிகமாக இறைவனின் விருப்பத்தால் கிடைக்கிறது. அல்லாஹ் சில நேரம் தனது ரஹ்மானிய்யத்தின் பண்பை வெளிப்படுத்தியவாறு எந்த அமலும் இல்லாமலும் கூட வழங்குகின்றான் அல்லது எவ்வளவு அமல் செய்யப்பட்டதோ அதனை விட ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமாகவே வழங்கி விடுகிறான் அல்லது ரஹீமிய்யத் என்ற பண்பின் ஒளியின் கீழ் வெகுமதிகளை வழங்குகின்றான் எனில், அதுவும் இறைவன் தனது விருப்பத்தினால் வழங்குகின்றான். அல்லாஹ்வே அடியானுக்கு தவ்ஃபீக் வழங்குகிறான். அவன் ஒரு வேலை செய்தால் அல்லது துஆ செய்தால் அதன் விளைவாக நல்ல விளைவு ஏற்படச் செய்கிறான்.

பிறகு மூன்றாவது விசயமாக கூறுகின்றார்கள்: தனது விருப்பத்திற்கு ஏற்ப அவன் உதவி செய்கின்றான். இறைவனை விட அதிகமாக யார் விருப்பத்திற்கேற்ப கருணை காட்ட முடியும்? அல்லாஹ் அடியானின் மீது தனது கருணையைக் காட்ட விரும்பினான். காரணம், அவன் தனது ரஹ்மத்தை மிகப் பரந்ததாக ஆக்கியுள்ளான். அல்லாஹ்வின் வாக்குறுதி அவனது விருப்பத்துடன் இணையும் போது பிறகு வெகுமதிகள், அருள்கள், பேருதவிகளின் பெருமழை பொழியத் தொடங்குகிறது. அதனை அளவிடவே முடியாது. இக்காட்சி நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் மட்டும்தான் இக்காலத்தில் தென்படுகிறது. ஏனெனில் அல்லாஹ்வின் வாக்குறுதி, தீர்ப்பு அவர்களின் வெற்றியை அறிவிக்கிறது.

பிறகு அடுத்த விசயமாக அவர்கள் கூறுகின்றார்கள்: ஹம்தின் உண்மையான உரிமையாளன் யார் எனில், அவனிடம் எல்லா அருள்கள் மற்றும் ஒளியின் ஊற்றுகள் பீறிட்டு வெளிப்படுகின்றன. எனவே மனிதன் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறும்போது இதனை சிந்தித்தவாறு கூற வேண்டும். அல்லாஹ்வின் சுயவிருப்பம் மட்டுமே மனிதனுக்கு எல்லா அருள்களையும் கொண்டு வருகிறது. அவனே வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒளியாகவும் இருக்கிறான். அல்லாஹ் கூறுகிறான்: *அல்லாஹுௗ நூருஸ்ஸமாவாத்தி வல் அர்ளி* – அவன் ஒளியாக இருக்கிறான். எனவே அவன் பக்கமே மனிதன் திரும்ப வேண்டும். அவனை முன்னோக்கி, அவன் முன்னால் குனிய வேண்டும். இவ்வாறு மனிதன் உண்மையான புகழ்பவனாக ஆகி இருள்களிலிருந்து ஒளியை நோக்கி முன்னேறிக் கொண்டே செல்கிறான். இங்கு பிறகு அல்லாஹ்வுடைய பேருதவியின் ஒரு புதிய கருத்து ஆரம்பமாகிறது.

அல்லாஹ் கூறுகின்றான்: *அல்லாஹுௗ வலியுல்லஸீன ஆமனூ யுக்ரிஜுௗனஹுௗம் மினள்ளுலுமாத்தி இலன்னூர்* – அல்லாஹ் ஈமான் கொள்பவரின் நண்பனாகி விடுகிறான். அவனை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு வருகிறான். எந்த மனிதனுக்கு அல்லாஹ் நண்பனாகி விடுவானோ பிறகு அவனுக்கு அல்ஹம்துலில்லாஹ் குறித்த ஓர் புதிய கருத்து கிடைக்கிறது. பிறகு அவருக்கு

அல்லாஹ்வின் அருள்களின் ஒரு புதிய தொடர் ஆரம்பமாகிறது. உண்மையான ஹம்து செய்பவர் இறைவனின் அருள்களின் வாரிசாகிறார். வாரிசாவதற்கான முடிவில்லா தொடரும் ஆரம்பமாகிறது. ஒன்றுக்குப் பிறகு மற்றொரு அருள் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: இன்னும் நினைவில் கொள்ளத்தக்க விசயமாவது, அல்லாஹ் எவர் மீதும் அறியாமல் கருணை காட்டுவதில்லை அல்லது எந்த நிர்பந்தத்தினாலும் கருணை காட்டுவதில்லை. மாறாக தனது அகப்பார்வையினால் கருணை காட்டுகிறான். தான் கருணை காட்டுவதை அறியவும் செய்கிறான். அதற்குப் பிரதிபலனும் வாங்கமாட்டான். ஆனால் அடியானுக்கு இதனையும் கூறி விட்டான். நீங்கள் நன்றி செலுத்தினால், உண்மையான ஹம்து செய்தால், அடியாரின் உரிமையை நிறைவேற்றினால் ல அஸீதன்னகும் – இன்னும் அதிகமாகவே உங்களுக்கு கிடைக்கும். எனது வெகுமதிகளும் உதவிகளும் அதிகரித்துக் கொண்டே செல்லும். இந்த வெகுமதிகள் மற்றும் கருணைகள் இவ்வுலகில் மட்டும் உங்கள் மீது இறங்குவதில்லை. மாறாக, மறு உலகிலும் உங்கள் மீது இந்த வெகுமதிகளும் கருணைகளும் இறங்கும். பிறகு ஹம்தின் முடிவில்லா பழங்களை சாப்பிட்டுக் கொண்டே செல்வீர்கள்.

பிறகு கூறினார்கள்: இவ்வுலகிலுள்ள அவனல்லாத ஏனையவற்றை நீங்கள் புகழ்ந்தால் அதுவும்கூட இறைவன் பக்கமே செல்கிறது. அதுவும் இறைவன் பக்கமே எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு உண்மையான மூஃமினுக்கு இந்த புரிதிறன் இருக்க வேண்டும். எல்லாப் புகழும் அவனிடமே திரும்புகின்றன. ஏனெனில் வல்லமைகளின் உரிமையாளன் ஆவான். வானங்கள், பூமியிலுள்ள ஒவ்வொன்றையும் படைப்பவன் அந்த இறைவனே ஆவான். அவை உயிருள்ள படைப்புகளாக இருந்தாலும் சரி, உயிரில்லாத படைப்பினமாக இருந்தாலும் சரியே. தாவரங்களாலும் சரி, விலங்குகளானலும் சரி, மனிதாக இருந்தாலும் சரி இவையனைத்தையும் படைத்து அதில் மனிதன் பயனடையத்தக்க சிறப்புத்தன்மைகளை படைப்பவன் இறைவனே ஆவான்.

எனவே எந்தவொரு பொருள் அல்லது எந்தவொரு மனிதனும் பிற மனிதனுக்கு பயனளிக்கக்கூடிய அந்த சிறப்புத்தன்மை அல்லது சக்தி வழங்கப்படாத வரை அவனுக்கு சுயமாக எந்த முக்கியத்துவமும் இல்லை. எண்ணற்ற பொருள்களை நாம் பார்க்கிறோம். இவ்வுலகிலும் பார்க்கிறோம். பயனளிக்கும் தன்மையை அதில் இறைவன் வைத்துள்ளான். இறைவன் நாடாதவரை அதிலிருந்து மனிதன் பயனடைய முடியாது. எனவே ஒவ்வொரு சிறப்புத் தன்மையும் ஒவ்வொருவருக்கும் இறைவனது விருப்பம், இறைநாட்டம், இறைவனுக்கு இயற்கைச் சட்டத்தின் மூலமே கிடைக்கிறது. பிறகு அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து பயனடைந்த பிறகு உண்மையான நன்றியுடைமையை இறைவனுக்கு செலுத்த வேண்டும். அவனுக்கே ஹம்து செலுத்த வேண்டும். அவன்தான் இந்த காரணிகளையும் பொருள்களையும் உருவாக்கினான். அதன் காரணத்தால்தான் அல்லாஹ்வின் அடியார்கள் பயனடைந்தனர். ஒரு மூஃமின் பயனடைந்தார். ஆம், இதுவும் கட்டளையாகும். நன்றியுடைமையை அடியார்களுக்காகவும் காட்ட வேண்டும். எந்த மனிதரிடமிருந்து பயனடைகிறீர்களோ அவருக்கும் நன்றி செலுத்துங்கள். அடியார்களுக்கு இந்த நிய்யத்தில் நன்றியுடைமை காட்டினால் – இறைவன் எனது பயனுக்காக இதனை படைத்துள்ளான். எனக்கு பலன் கிடைக்க இதனை காரணமாக்கினான். எனது மேன்மைக்கு இதனை காரணமாக்கினான் என்ற நிய்யத்தில் நன்றியுடைமை காட்டினால் அதுவும் இறைவனுக்கு நன்றியுடைமை காட்டுவதாகும். அந்த நன்றியுடைமை அந்த இறைவனுக்கே உரியதாகும். அவன் எல்லா உலகங்களுக்கும் ரப் ஆவான். அவனே நம்மையும் படைத்தான். நம்மை பராமரிக்க ஏற்பாடு செய்தான். பிறவற்றிற்காகவும் இந்த ஏற்பாட்டை செய்துள்ளான். பிறகு எந்தவோர் அடியானையும் ரப் ஆக மனிதன் ஆக்க மாட்டான். இம்மனிதனால் எனக்கு இந்த வேலை நடந்தது அல்லது இந்த மனிதனால் தான் எனக்கு எல்லாம் கிடைத்தது என்று நினைக்கமாட்டான். பிறகு உண்மையான ரப் அல்லாஹ்வே இருப்பான். இதுவே ஒரு மூஃமினின் அடையாளமாகும். அவன் அடியானின் உதவிக்கு நன்றி தெரிவிக்கும்போது கூட அந்த கருணையின் ஊற்று அந்த இறைவனேதான் என்று கருதுகிறார். அதுமட்டுமின்றி ஒருவரிடம் நல்ல நடைமுறையை கண்டால் அந்த நன்னடைமுறைக்கு காரணம் கூட இறைவன்தான் என்று கருதுவார். அவனே மற்றவரின் உள்ளத்தில் நல்ல நடைமுறையைக் காட்டுமாறு எண்ணத்தை வழங்கினான்.

எனவே ஓர் உண்மையான மூஃமினின் சிந்தனை ஒவ்வொரு பயனைப் பெறும் போது அது யார் மூலமாக வந்தடைந்தாலும் அதனை இறைவனின் பக்கம் எடுத்துச் செல்கிறார். இந்த நிலை ஏற்பட்டால் அதுவே உண்மையான ஹம்து ஆகும். இதன் பக்கமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை கவனமூட்டியுள்ளார்கள். இதனை நிலைநாட்டுமாறு நமக்கு கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் அன்பர்களின் பெரும்பாலார் இந்த சிந்தனையுடன் இறைவனை புகழ்கிறார்கள். அவ்வாறு புகழவும் வேண்டும். ஈமான் கூட இந்த உண்மையான ஹம்து உடன்தான் வளர்ச்சி பெறுகிறது. ஆனால் ஜமாஅத் அளவில் நாம் இதனை சிந்தனை செய்ய வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜமாஅத்திற்கு பல்வேறு வகையில் முன்னேற்றத்தைக் காட்டினான். அதற்காக நாம் இறைவனை புகழ வேண்டும். அறிபவர்களாக வேண்டும். இவ்வழியில் நாம் ஹம்து –ஐ செலுத்தினால் நிச்சயமாக அல்லாஹ்வின் அருளின் மழை முன்னரை விட அதிகமாக பொழியும். இந்த உண்மையான ஹம்து மனிதனுக்குள் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்துகிறது. நுட்பமான ஷிர்க்கிலிருந்தும் காப்பாற்றுகிறது. ஒரு மனிதனை உண்மையான ஆபித் – இறைவனை வணங்குபவராக்குகிறது. பிறகு அல்லாஹ்வின் கட்டளைகளை – ஏவல்களை தேடி அதனை செய்வதற்காக கவனமூட்டுகிறது. மனித கண்ணியத்தை மேற்கொண்டு உயர் நல்லொழுக்கம் காட்டுவதன் பக்கம் கவனமூட்டுகிறது. எனவே இந்த ஹம்து –ஐ செய்வதற்கான தேடுதல் நம்மிடம் இருக்க வேண்டும்.

கடந்த ஜுமுஆ குத்பாவை நான் கனடாவிலிருந்து வழங்கினேன். அமெரிக்கா மற்றும் கனடாவின் இளைஞர்களைப் பற்றி கூறினேன். அல்லாஹ் அவர்களுக்கு தவ்ஃபீக் செய்திருந்தான். அவர்கள் கணிசமாக பல வேலைகளை திறம்பட செய்திருந்தார்கள். குறிப்பாக தொடர்புகளை மேம்படுத்துவதில் கணிசமாக முன்னேறியிருந்தனர். தொடர்புகளின் சிறந்த விளைவுகளும் தென்பட்டன. நிறைய படித்த மக்களுடன் அவர்கள் தொடர்பு வைத்திருந்தனர். அந்நாட்டின் முக்கிய பிரமுகர்களின் தொடர்பு அவர்களுக்கு இருந்தது. அந்த தொடர்பின் காரணத்தால் நான் அங்கு சென்ற போது அவர்களை சந்திக்கவும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களுள் பெரும்பாலார் நமது மிசன் ஹவுஸ் வந்து என்னை சந்திக்க வந்தனர். பெரிய பிரமுகர்கள் எல்லாம், அவர்கள் வரவேமாட்டார்கள் என்று நாம் எதிர்பார்த்திருந்த மக்கள் வந்தனர். அவர்கள் நாட்டின் அரசியல் கொள்கைகளை உருவாக்குகிறார்கள். உலகை ஆட்சி செய்பவர்கள்; உலகின் அரசியல் கொள்கைகளை வகுப்பவர்கள் ஆவர். அவர்களிடம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. தொடர்புகளின் காரணமாக இந்த பலன் கிடைத்தது. நான் ஏற்கனவே கூறியது போன்று இதில் பெரும் பங்கு இளைஞர்கள் உடையதாகும். ஆனால் கனடாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி இந்த இளைஞர்கள் உலகின் வேறு எந்த பகுதியினராயினும் சரி அவர்களிடம் நான் கூற விரும்புவதாவது, எந்த உலகியல் தொடர்பையும் பெரும் சாதனையாக கருதாதீர்கள். ஆம்! ஒரு வாய்ப்பினை இறைவன் உங்களுக்கு வழங்கியுள்ளான். எந்த அளவுக்கு உலகில் உங்களால் முடியுமோ அவர்கள் வரை இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை சென்று சேர்த்து விடுங்கள். அவர்களை நீங்கள் சந்திக்க வைத்தது, நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தது ஆகியவற்றால் எனக்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை அவர்களுக்கு எடுத்து வைக்க வாய்ப்பு கிடைத்தது. உலக விசயங்களில் நுண்ணிய அறிவால் முடிவெடுக்கக் கூடியவர்களிடம் உலகிற்கு எவ்வாறு வழிகாட்ட முடியும்? என்று கூற முடிந்தது.

எல்லா இளைஞர்களிடம் நான் கூற விரும்புகிற முதல் விசயமாவது, நான் இப்போது அமெரிக்கா, கனடாவில் சுற்றுப்பயணம் முடித்து வந்துள்ளேன். எனவே அங்குள்ள இளைஞர்களிடம் குறிப்பாக கூற விரும்புவதாவது, நீங்கள் உங்கள் வெற்றியை உங்களது ஏதாவது சிறப்பின் காரணத்தால் கிடைத்ததாகும் எனக் கருத வேண்டாம். மாறாக இறை அருள் என்று கருதியவாறு அல்லாஹ்வைப் புகழுங்கள். அவன் உங்களுக்கு இவ்வாறு தொடர்பு ஏற்படுத்த வாய்ப்பினை வழங்கினான். இந்த தொடர்புகளால் நமது நோக்கம், சுய இலாபம் பெறுவதல்ல. அவ்வாறு இருக்கவும் கூடாது. நோக்கம் உலகிற்கு வழிகாட்டுவதாகும். முடிந்த வரை முயன்று உலகிற்கு நேர்வழியைக் காட்ட வேண்டும். அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது. இல்லையெனில் குறைந்தபட்சம், நமது கடமையாவது நிறைவேறி விடும். உலக அழிவிலிருந்தும் குழப்பத்திலிருந்தும் காப்பாற்ற வேண்டும். ஏனெனில் இப்போது உலகம் சென்று கொண்டிருக்கும் திசையில் தொடர்ந்து சென்றால், நிச்சயமாக பெரும் அழிவுதான் தென்படுகிறது. உலகை இறைவன் பக்கம் கொண்டு வர வேண்டும். எவரது உள்ளத்திலாவது இந்த தொடர்புகளால் நமக்கு ஏதாவது இலாபம் இருக்கிறது என்றோ அல்லது இது திறமையால் கிடைத்தது என்றோ

அல்லது இதனால்தான் அஹ்மதிய்யா ஜமாஅத் முன்னேறிச் செல்கிறது என்றோ கருதினால் அது முற்றிலும் தவறாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஹம்து பற்றி விளக்கியது போன்று அவையனைத்தும் இறை விருப்பம் ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு இறைவன் வெற்றியை வழங்க விரும்பினான். அந்த வெற்றியைப் பெறுவதற்கு நமது எளிய முயற்சிகள் இருந்தன. மற்றபடி அதனால் விளைந்தவை அனைத்தும் இறைவனின் உதவி என்ற நிலையில் விளைந்தவையாகும்.

எனவே ஒவ்வொரு முயற்சியின் பலனும் எவரது சுய முயற்சியால் விளைந்ததன்று. மாறாக, முயற்சியை விட அதிகமாக, இறங்கிய அவனது அருளின் விளைவாகும். இன்னும் சொல்வதாயின், முழுக்க முழுக்க அவனது அருளின் விளைவேயாகும். இந்த சிந்தனையை நிலைநாட்டினால் இறைவனது அருள் அதிகமாகிக் கொண்டே செல்லும். மற்றபடி உலவாதிகளிடம் நாம் எதுவும் பெறப்போவதும் இல்லை. அது நமது நோக்கமும் இல்லை. எனது அமெரிக்காவின் சுற்றுப்பயண அறிக்கையை அல் ஃபஸ்ல் பத்திரிகை படித்தவர்கள் வாசித்திருப்பீர்கள்.

அமெரிக்காவில் Capital Hill என்ற பகுதியில் அமெரிக்க காங்கிரஸ் செனட் கூடி நாட்டின் மற்றும் உலகின் முடிவுகளை எடுக்கிறது. அதுமட்டுமின்றி அங்கு இன்னும் முக்கிய அலுவலகங்கள் உள்ளன. அப்பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு ஹாலில் நடந்தது. நான் அங்கு சுருக்கமாக உரையாற்றினேன். இதனை திரித்துக் கூறி நமது எதிரிகள் சிலர் நமக்கு எதிராக, ஜமாஅத்திற்கு எதிராக உணர்வுகளைத் தூண்ட முயன்றுள்ளனர். பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிரான பகைமையை மேலும் வளர்க்க இதனை காரணமாக்க முயன்றனர். எவ்வாறாயினும் அவர்களுக்கு சிறப்பான எந்தக் கருத்தும் அங்கு கிடைக்கவில்லை. நான் அஹ்மதிகளுக்காக அமெரிக்க அரசிடம் உதவி கேட்டு சென்றதாக அவர்கள் யூகம் செய்தனர் நவூதுபில்லாஹ் அல்லது எனது நாட்டிற்கு அதாவது பாகிஸ்தானுக்கு எதிராக சூழ்ச்சி செய்வதற்காக சென்றுள்ளேன் என்று யூகித்தனர். நான் அங்கு பேசிய பேச்சை நீதியுடன் செவிமடுத்தால், அறிவுள்ள மனிதன் தீர்மானிக்க முடியும். இவர்களுக்கு நீதயின் கண்ணோட்டம் இல்லை. எனது சொற்பொழிவைக் கேட்டால் நான் அவர்களிடம் எதுவும் வாங்குவதற்காக சென்றேனா அல்லது அவர்களுக்கு கொடுக்கவும், கூறவும் சென்றேனா என்பதை புரிந்து கொள்ளலாம்.

நாம் இறைவனை மட்டுமே சார்ந்து நிற்கிறோம். ஜமாஅத்தின் முன்னேற்றம் இறைவன் அருளால் நடக்கக் கூடியதேயன்றி எந்த அரசின் உதவியினைக் கொண்டும் அல்ல. நமது உள்ளத்தில் ஒருபோதும் அதுபோன்று எண்ணம் வரவும் இல்லை. எனது நாட்டிற்கு எதிராக சதி செய்வதற்காக சென்றேனா என்று கேட்கப்படுமானால் நாம் அவர்களை விட அதிகமாக நாட்டை நேசிப்பவர்களாவோம். பாகிஸ்தானை உருவாக்குவதிலும் அதனை பராமரிப்பதிலும் அவர்களுக்கு எந்த பங்கும் இருக்கவில்லை. மாறாக இம்மக்கள் தமது இரு கைகளால் இந்நாட்டை கொள்ளையடிக்கின்றனர். மேலும் அழிவின் பக்கம் கொண்டு செல்கின்றனர். ஏதாவது வாங்குவதற்காக அங்கு சென்றேனா என்று கேட்கப்படும் எனில் நான் கூற விரும்புவதாவது, 2008-ல் நூற்றாண்டு விழா மாநாட்டிற்காக நான் அங்கு சென்ற போது, அங்கு வரவேற்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. உள்ளூர் மக்கள் வந்திருந்தார்கள். ஆனால் அதில் ஒரு செனட்டர் சிறிது நேரம் மட்டுமே இருந்தார். ஐந்து நிமிடங்கள் மட்டும் இருந்து விட்டுப் போய் விட்டார். அதுவும் நிகழ்ச்சிக்கு முன்பாகவே வந்து விட்டுப் போய் விட்டார். எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. அங்குள்ள காங்கிரஸ் உறுப்பினர்களோ, செனட்டர்களோ யாரும் இல்லை. எனக்கு நினைவில் உள்ளது. இரு நிமிடங்கள் அவருடன் பேச்சு நடந்தது. அவர் கேட்டார். எங்களிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

நீங்கள் என்ன கேட்பதற்காக வந்துள்ளீர்கள்? என்று அவர் கேட்பதாக எனக்கு பட்டது. ஏனெனில் பாகிஸ்தானியர்களைப் பற்றி அவர்களின் நினைப்பு அப்படித்தான் இருந்தது. இவர்கள் ஏதாவது உதவி கேட்டு வந்திருப்பார்கள் என்று நான் கூறினேன். உங்களிடம் எதுவும் கேட்பதற்காக நான் வரவில்லை. அப்போது அதுவே எனது பதிலாக இருந்தது. உலகில் அமைதியை நிலைநாட்ட நீங்கள் விரும்புவீர்களாயின் என்ன செய்ய வேண்டும்? என்று நான் கூற வந்துள்ளேன். எந்த பாலிஸியை நீங்கள் கடைபிடிக்க வேண்டும்? என்று கூற வந்துள்ளேன் என்றேன். ஒரேயொரு செனட்டர் வந்திருந்தார் என்று கூறினேன். சில நிமிடங்கள் மட்டும் அவர் என்னிடம் பேசி விட்டுப் போய் விட்டார்.

ஆனால், இந்த உரை அந்த Capital Hill பகுதியில் நடந்தது. அதன் முக்கியத்துவம் குறித்து நான் உத்தேசம் கொண்டது இவ்வளவுதான். அதாவது எல்லா காங்கிரஸ் தலைவர்களும் ஒன்றிணைந்து அங்கு வர வேண்டும். படித்தவர்களின் ஒரு பிரிவு வர வேண்டும். அவர்களிடம் இஸ்லாமிய போதனையின் சில அம்சங்களை எடுத்து வைக்க வேண்டும். உலக அமைதிக்காக இதனை கேட்டு விட்டு இம்மக்கள் சரியான அடியை எடுத்து வைப்பதற்கான எண்ணமாவது அவர்களிடம் உருவாக வேண்டும் என்ற உத்தேசம் தான் இருந்தது. இந்த நிகழ்ச்சிக்கு ஒருநாள் முன்பாக CNN TV –ன் ஒரு பிரதிநிதி என்னை நேர்காணல் எடுத்தார். உங்களுக்கு பெரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதுபற்றி என்ன கருதுகிறீர்கள்? என்று கேட்டார். நான் அவரிடம் கூறினேன். திடீரென்று என் வாயில் இருந்து இவ்வாறு வார்த்தை வெளிவந்தது. என்னைப் பொருத்தவரை இது ஒன்றும் அளவுகடந்த அரிய வாய்ப்பு ஒன்றுமில்லை. நான் அளவு கடந்து வியந்து போகும் அளவுக்கு பெரிய வாய்ப்பு ஒன்றும் இது இல்லை என்று கூறினேன். நான் எம்மக்களை சந்திப்பதற்காக அமெரிக்கா சுற்றுப்பயணம் வந்துள்ளேன். மார்க்க, நல்லொழுக்க, ஆன்மீக நிலைகளின் பக்கம் அவர்களுக்கு கவனமூட்ட வந்துள்ளேன் என்றேன்.

அவர் கூறினார். உங்களது கூற்று அமெரிக்க அரசியல்வாதிகளுக்கு அதிர்ச்சியைத் தரும் விசயமாகுமே! நீங்கள் இந்நிகழ்ச்சிக்கு முக்கியம் தரவில்லை. பிறகு சிரித்தவாறு கூறினார். எவ்வாறிருப்பினும், நான் அந்த அரசியல்வாதிகளிடம் இதனை கூறமாட்டேன். எவ்வாறிருப்பினும் உலகியல் வாதியின் பார்வையில் இதற்கு பெரும் முக்கியத்துவம் இருக்கும். ஆனால் நமது பார்வையில் அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை; இருக்கவும் கூடாது. ஆம்! நாம் உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்திக் காட்டியவாறு அவர்களுக்கு நிச்சயமாக நன்றி செலுத்துகிறோம். ஏனெனில் அவர்கள் நமது பேச்சைக் கேட்டார்கள். அதுபோன்று நிகழ்ச்சிக்கு முன்னால் பல்வேறு சந்திப்புகள் நடந்தன. அங்குள்ள இராணுவத்தின் பலவகையான பிரிவுகளின் சேப்ளைன் என்ற மத குருக்கள் ஓர் அஹ்மதியின் தொடர்பினால் என்னை சந்திக்க வந்திருந்தனர். 5 – 6 பேர் இருந்தனர். அதில் ஒருவர் கேட்டார். நீங்கள் நாளை காங்கிரஸிலுள்ள செனட்டர்களிடம் உரை நிகழ்த்தப் போகிறீர்கள். பதற்றமடையவில்லையே! என்றார். நான் கூறினேன். முற்றிலும் இல்லை. நான் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்திலுள்ள விசயங்களை கூறப் போகிறேன். இதில் பதற்றமடைய வேண்டிய விசயம் எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்ற இறைவன் எனக்கு வாய்ப்பு வழங்குகிறான்.

அதற்கு அவர் கூறினார். இதுபோன்ற வாய்ப்பு கிடைத்தால் பெரும் சங்கடம் ஏற்படும். சிலவேளை நெர்வெஸாகி விடவும் செய்கிறோம். நாங்கள் அதிகமாக சொற்பொழிவாற்றக் கூடியவர்கள்தான் என்றும் கூறுகிறார். இதற்கு காரணம் இம்மக்கள் மார்க்க சடங்குகளை செய்வதற்காக உருவாக்கப்பட்டவர்கள். இவர்களை ஆன்மீகத் தலைவர்கள் என்றும் கூறலாம் என்ற போதிலும், உலகியல் நோக்கம் இவர்களை மிகைத்துள்ளது. Capital Hill என்ற இந்த பெயர் இவர்களை மிரட்சி அடையச் செய்துள்ளது. இவ்வளவுக்கும் இவர்கள் அமெரிக்கர்களே! ஆனால் ஒரே இறைவனை நம்புபவருக்கு இறைவனே எல்லாம் ஆகும். ஜமாஅத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களும் இம்மக்களைப் போன்றுதான் உலகியல்வாதிகளின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். இத்தாக்கத்திற்கு ஆளாவதன் காரணமாக ஒருபோதும் இதுபோன்று வாய்ப்பு இவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்களுக்குள் மீட்டிங் நடக்கும். அவர்களுள் சிலர் சென்று சந்திப்பர். ஆனால் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை சென்று சேர்க்கவும், திருக்குர்ஆனின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்கவும் வாய்ப்பு கிடைப்பதில்லை.

இந்த மீட்டிங் முடிந்ததும் ஒரு காங்கிரஸ் மேன் இன்னொருவரிடம் கூறியதாக நமது ஓர் அஹ்மதி கேட்டிருக்கிறார். முஸ்லிம் தலைவர்கள் இவ்வாறு வெளிப்படையாக, துணிச்சலுடன் பேசுபவர்களாக இருக்க வேண்டும். உண்மையைப் பேச வேண்டும். அழுத்தமான வார்த்தைகளைப் பேச வேண்டும். எவ்வாறிருப்பினும் இது இவர்களிடம் ஏற்பட்ட தாக்கமாகும். இதுவரை எந்த முஸ்லிம் தலைவரும் ஏன் இஸ்லாமிய அரசின் தலைவர்களுக்கும் கூட அல்லாஹ் இந்த வாய்ப்பினை வழங்கவில்லை. காரணம் இவர்களுக்கு மார்க்கத்தை விட அதிகமாக உலகின் பக்கம் தான் கவனம் உள்ளது. ஆகவே இளைஞர்கள் இந்த சிந்தனையுடன் தொடர்பு

வைக்க வேண்டும். நாம் இந்த உலகியல் தலைவர்களிடமிருந்து எதுவும் பெறப்போவதில்லை. இன்னும் சொல்வதாயின், அவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

எல்லாவற்றையும் விட அதிகமாக அல்லாஹ்வுடன் நன்றியுடைமையின் உணர்வு இருக்க வேண்டும். இறைவனது அருள் எவ்வாறு அதிகரிக்கிறது என்று பிறகு பாருங்கள். நினைவில் கொள்ளுங்கள். ஜமாஅத்தின் பணிகளில் உலகியல் நோக்கம் ஒருபோதும் குறுக்கே வராது. உலகியல் விசயங்களையே எல்லாம் என்று இறைவன் தந்ததை திரும்பப் பெறவும் ஆற்றல் உள்ளவன் ஆவான். எனவே நமது நோக்கம் எப்போதும் இறைவனது ஹம்தின் மீது திருப்தி அடைவதாக இருக்க வேண்டும்; இருக்கிறது. இன்ஷா அல்லாஹ்.

நமது வாழ்வின் நோக்கம் இந்த உலகியல்வாதிகளை சென்றடைவதல்ல. அமெரிக்காவின் Capital Hill ஆக இருக்கலாம் அல்லது வேறு அரசு கோட்டையாக இருக்கலாம். அங்கு சென்று நிகழ்ச்சிகளை நடத்துவது நமது வாழ்வின் நோக்கமாக இருந்ததில்லை; இருக்கவும் செய்யாது; இருக்கவும் கூடாது. அது நமது இறுதி இலக்கு அல்ல. ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டிய நமது இலக்கு ஒரே இறைவனின் முன் குனிபவர்களாக இந்த உலகை மாற்ற வேண்டும். அவர்கள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும் சரியே! இதுவே நமது இறுதி இலட்சியம் ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கொடியை எந்த மாளிகைகளில் பறக்கும் கொடிகளை விடவும், உலகக் கொடிகளை விடவும் உயர்த்த வேண்டும். அதுவே நமது நோக்கமாகும். M.T.A.-ல் பார்த்திருப்பீர்கள். பெரும்பாலார் நான் கூறுவது அனைத்தும் திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் இஸ்லாமிய போதனை என்னும் உண்மையான போதனையை கூற முயன்றுள்ளேன். இதில் எனது சிறப்பு எதுவுமில்லை. நான் என்னைக் குறைந்த அறிவு படைத்த எளிய மனிதனாகவே கருதுகிறேன். ஆனால் எந்த மஸீஹ் மவ்வூதின் பிரதிநிதியாக அங்கு சொற்பொழிவாற்ற சென்றேனோ அவர்களுடன் அவர்களது எஜமானர், நமது எஜமானர், நமது வழிகாட்டி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம், இறைவன் தந்த வாக்குறுதியாவது, நுஸிர்த்து பிர் ரூஹ் என்பதாகும்.

நான் அங்கு சென்று கொண்டிருந்த போது, இந்த துஆவைத்தான் செய்தேன். இது மிகப் பெரிய மாளிகை என்று இவர்கள் கூறுகிறார்கள் என்ற எண்ணம் வந்தது. அதற்கு முன் அதுபற்றி சிந்திக்கவும் வாய்ப்பில்லை. போகும்போதே எனக்கு அந்த எண்ணம் வந்தது. இறைவா! நான் உனது எளிய அடிமையாவேன். நான் உனது தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு செல்கிறேன். உனது மஸீஹ் மவ்வூதின் பிரதிநிதியாக செல்கிறேன். எனவே நுஸிர்த்து பிர் ரூஹ் என்ற காட்சியை நாங்கள் அங்கு கண்டோம். அப்துல் மலிக் கான் சாஹிப் உடைய மகன் அன்வர் மஹ்மூத் கான் சாஹிப் அங்குள்ள தலைமையக உறுப்பினர் அங்கு வசிப்பவர். அவர்கள் சுருக்கமான கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அல் ஃபஸ்ல் மற்றும் பிற பத்திரிகைகளில் அதனை அச்சிட வேண்டும் என்று கருதுகிறேன். இந்தக் கட்டுரையில் இந்த அரசியல்வாதிகளின் அங்குள்ள நிலைமைகளைப் பற்றியும் இந்த அரசியல்வாதிகளின் கண்ணோட்டம் குறித்தும் அவர்களிடம் என்ன தாக்கம் ஏற்பட்டது என்பது குறித்தும் கூறப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் 29 காங்கிரஸ் செனட் உறுப்பினர்கள் வந்திருந்தனர். மேலும் Think - Tank உறுப்பினர்கள், பென்டகான் உடன் தொடர்புடையவர்கள், சில N.G.O.க்கள், புரொஃபஸர்கள் ஆகிய இந்த பிரமுகர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 110 ஆக இருந்தது. பொதுவாக அங்குள்ள நடைமுறையாக கூறப்படுவதாவது, காங்கிரஸ் மென் செனட்டர்கள் அதிகமாக உட்காரமாட்டார்கள். சிறிது நேரத்துடன் அதில் சிலர் எழுந்து சென்று விடுவர். அது அவர்களின் நல்லொழுக்க நிலையைப் பொருத்தது. உட்காரவே மாட்டார்கள்; எழுந்து சென்று விடுவார்கள் என்பதை எல்லாரும் அறிவர். ஆனால் இந்த நிகழ்ச்சியில் 2-3 பேர்கள் செல்வதற்கு அனுமதி பெற்றிருந்தார்கள். அவர்களைத் தவிர மற்ற அனைவரும் முழுநேரமும் உட்கார்ந்திருந்தார்கள்.

இன்னும் சொல்வதாயின், அங்குள்ள Capital Hill -ன் பழைய பிரமுகர் ஒருவர் கூறுகிறார். நான் 15 வருடங்களில் முதன்முறையாக பார்க்கிறேன். இவ்வாறு முன்னர் பார்த்ததில்லை. 10ஐ விட அதிகமாக 23 காங்கிரஸ் மென் மற்றும் செனட்டர்கள் எந்த நிகழ்ச்சியிலும் ஒன்றாக வந்ததில்லை. 2-வது, 5-வது

நிமிடங்களுக்குப் பிறகு அவர்கள் விரும்பிய நிகழ்வுகளாக இருந்தால் கூட அமராமல் எழுந்து போய் விடுவார்கள். நாட்டுத் தலைவர்கள் வந்தாலுமே தமது நிகழ்ச்சிகளில் கூட உட்காரமாட்டார்கள்.

பிறகு இன்னொரு விசயம் எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது என்று கூறுகிறார். பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் ஆளும் கட்சி தலைவர்களும் எதிர்க்கட்சி தலைவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். 2008-ல் என்னை சந்தித்த செனட்டர் பற்றி கூறினேன். அவர் தற்பெருமையுடன் நடந்தவர். இம்முறை மேடையில் வந்து அமர்ந்து எனது பேச்சை முழுவதும் கேட்டு விட்டுச் சென்றார். சில செனட்டர்கள் அல்லது காங்கிரஸ் மென் இருக்கை குறைவாக இருந்ததால் நின்று கொண்டிருந்தனர். பெரிய பெரிய அரங்குகளும் அங்கு உள்ளது. அவை கோல்டு ரூம் என்ற பெயர் கொண்ட சுமாரான அளவிலான ரூம் அல்ல. அவை அளவில் பெரியது. பெரும் பெரும் நிகழ்ச்சிகள் அவற்றில் நடக்கும். இங்கு இருக்கைகள் குறைவாக இருந்ததால் நின்று கொண்டிருந்தனர். தொடர்ந்து கேட்டனர். அவர்களின் இயல்பிற்கு பொருந்தாத விசயங்களாக இருந்தவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தனர். நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நீதியை நீங்கள் நிலைநாட்டாவிட்டால், எவ்வளவு பெரிய ஆற்றல் உங்களிடம் இருந்தாலும் உங்கள் இந்த நாட்டின் நிர்வாகத்தை உங்களால் சமாளிக்க முடியாது. பெரிய சமுதாயங்கள் சிறிய சமுதாயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். அமைதியை நிலைநாட்டுவதற்கு இது மிகவும் அவசியமாகும். U.N.O.-ன் பாதுகாப்புக் கவுன்சில் சமுதாயங்களை சமமாக நடத்த வேண்டும். பிற நாட்டின் செல்வங்கள் மீது பார்வையை செலுத்தக் கூடாது. இதனையே கூறினேன். இது அவர்களின் இயல்புக்கு பொருத்தமான விசயம் என்று கூற முடியாது. இவை அனைத்தையும் திருக்குர்ஆனின் போதனையிலிருந்து நான் கூறினேன்.

எனது சொற்பொழிவிற்குப் பிறகு ஆப்பிரிக்க அமெரிக்கனாகிய முதல் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒரு மனிதர் கூறினார். மற்றவரது செல்வத்தை பேராசையுடன் பார்க்காதீர்கள் என்று நீங்கள் கூறியது என்னை மிகவும் கவர்ந்தது. என்ன அரசியல்வாதிகள்! எவ்வாறு பார்க்கப்படுகிறது? என்று அவர்களுக்கும் தெரியும். இந்த சொற்பொழிவை அச்சிட்டு விரைவில் எல்லாருக்கும் வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இன்னோர் காங்கிரஸ் உறுப்பினருடைய கருத்து இவ்வாறு இருந்தது. இந்த தூதுச் செய்தி தான் இன்று அமெரிக்காவுக்கு மிகவும் தேவையாக உள்ளது என்றார். எனவே இம்மக்கள் வரை இஸ்லாத்தின் அழகிய போதனையை கொண்டு சேர்த்தது முழுக்க முழுக்க இறைவனின் அருளால் தான் நடந்தது. இதனால் அவர்களிடம் தாக்கம் ஏற்பட்டதோ? இல்லையோ? அவர்கள் கவனத்துடன் கேட்டார்களா? இல்லையா? என்பது தெரியாது.

ஆனால் இஸ்லாத்தின் அழகிய போதனை எவ்வாறிருப்பினும் இவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டு விட்டது. அல்லாஹ்வுக்கே ஹம்து உரியது. அவனே இதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினான். ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். இதுபோன்று இவர்களின் அரசியல்வாதிகளை சந்தித்த போது அவர்களிடம் நீதியைப் பற்றி எடுத்துக் கூறினேன். இதன் பக்கம் கவனம் செலுத்தினால் உலகமும் குழப்பத்தில் இருந்து பாதுகாக்கப்படும். இவ்வாறு செய்யவில்லை எனில் இறை வல்லமை தனது வேலையை செய்யும். கனடாவிலும் அல்லாஹ்வின் அருளால் வெளிவிவகாரத்துறை செயலரான நமது இளைஞர் மற்றும் அவரது குழுவிற்கு நல்ல தொடர்பு இருக்கிறது. புதிய மக்கள் மற்றும் பழைய மக்களிடம் தொடர்பை நிலைநாட்டினர். அவர்களும் வாய்ப்பு அளித்தமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஜமாஅத்திற்கு சிறு பணி செய்யவும் உண்மை மற்றும் நீதியின் பேச்சை அவர்களிடம் கொண்டு சேர்க்க முடிந்தது.

பல கட்சித் தலைவர்கள் அரசியல்வாதிகள் ஆகியோரை என்னுடன் சந்திக்க வைத்தனர். உலகினை அமைதி நிறைந்த இடமாக்குவதற்கு இந்த அரசியல்வாதிகளுக்கு புரிய வைப்பது மிகவும் அவசியமாகும். இம்முறை கனடாவில் இரு சொற்பொழிவுகள் உருவாகின. (தாஹிர் என்ற பெயரில்) புதிய ஹால் ஒன்று உருவாக்கியுள்ளார்கள். அதன் திறப்பு விழா நடந்தது. அதில் உள்ளூர் கனடாவாசிகள் கணிசமாக வந்திருந்தனர். அரசியல்வாதிகளும் மற்றவர்களும் இருந்தனர். அவர்களிடம் இயல்பாகவே போதனை குறித்து சிறிது கூற வாய்ப்பு கிடைத்தது. சில விருந்தினர்களின் அபிப்பிராயங்கள் எனக்கு வந்து சேர்ந்துள்ளது.

அது மிகவும் திருப்தி அளிப்பதாக உள்ளது. இந்த அபிப்பிராயங்கள் அவர்களின் மனமாற்றத்திற்கும் அவர்களது பாலிஸிக்களை மாற்றக் கூடியதாகவும் அல்லாஹ் ஆக்குவானாக!

இந்த தாஹிர் ஹாலைப் பற்றி சிறிது கூறுகிறேன். அரசின் சில தொண்டு நிறுவனங்கள் N.G.O. –க்களுக்கு உதவி செய்கிறது. எனவே இந்த ஹால் கட்டுவதற்கு அரசு 2 முதல் 2½ மில்லியன் டாலர் வரை தருவதாக வாக்களித்தது. அத்துடன் ஜமாஅத்தும் ஒரு பகுதி கொடுக்க வேண்டும். இதுபற்றி எனக்கு தெரிய வந்ததும் நான் கூறினேன். அரசு கொடுக்கும் தொகையை நன்றியுடன் திருப்பிக் கொடுத்து விடுங்கள். ஜமாஅத் தாமே செலவழித்துக் கட்ட முடிந்தால் கட்டட்டும் என்று கூறினேன். அல்லாஹ் அருள் புரிந்தான். ஜமாஅத்திற்கு வாய்ப்பு வழங்கினான். பல மில்லியன் டாலர் செலவழித்து ஒரு ஹாலும் அது தவிர கனடா ஜமாஅத் பள்ளி கட்டும் திட்டமும் உள்ளது. பல மில்லியன் டாலர் திட்டம் அது. அல்லாஹ்வின் அருளால் அதற்காக செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தியாகம் செய்யும் ஜமாஅத் ஆக உள்ளது. அல்லாஹ் அவர்களின் பொருளிலும் உயிரிலும் பரக்கத்தை வழங்குவானாக!

ஜாமிஆவுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டு வருகிற கட்டடம் வாங்கப்பட்டது தான். ஆனால் இப்போது அது மிகவும் சிறியதாகி விட்டது. குழந்தைகளுக்கு வகுப்பறைகள், அலுவலகங்களும் உருவாகின்றன. Peace Village –லேயே இருப்பதால் அதனை கட்டுப்படுத்துவது எளிதானது. இன்ஷா அல்லாஹ். ஜாமிஆ இவ்வருடம் ஆரம்பமாகி விடும். இந்த முன்னேற்றங்களைப் பார்த்த பிறகு நமது உள்ளம் அல்லாஹ்வின் ஹம்து – ஆல் நிறைகிறது. அல்லாஹ் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரையும் நன்றி செலுத்துபவராகவும், ஹம்து செய்பவராகவும் ஆக்குவானாக! ஜமாஅத் தொடர்பின் காரணமாக Ontario –ன் முதலமைச்சர் மிகவும் ஆர்வத்துடன் ஒரு Reception –க்கு ஏற்பாடு செய்தார். அல்லாஹ்வின் அருளால் அங்குள்ள ஜமாஅத்திற்கு எல்லா தரப்பிலும் நல்ல தொடர்பு உள்ளது. நான் கனடா வந்தது தெரிந்ததும் என்னுடன் Reception நடத்துவதற்கு விரும்புவதாக தெரிவித்தார். முதலில் மறுக்க வேண்டியதாயிற்று. காரணம், நேரம் குறைவாக இருந்தது. மாநகரில் முதலமைச்சரின் அலுவலகம் உள்ளது. போக்குவரத்துக்கும் மிகவும் சிரமம் ஏற்படும். நான் அங்கு தங்குவதனால் போக்குவரத்துக்கு சிரமம் ஏற்படும். உங்களது எண்ணம் அவ்வாறு இருக்கும் எனில் நீங்கள் தங்கியிருக்கிற இடத்திற்கு அருகிலுள்ள பெரிய ஹோட்டலில் Reception தருகிறேன் என்றார். கண்டிப்பாக வர வேண்டும் என்றார். இதனால் மறுக்க வழியில்லை.

எனவே அவர் விருந்தளித்தார். மிகவும் நல்ல வார்த்தைகளால் ஜமாஅத்தைப் பற்றி பேசினார். ஜமாஅத்தின் தொடர்பை குறிப்பிட்டார். ஜமாஅத்தின் பணிகளைப் பற்றி குறிப்பிட்டார். 10–15 நிமிடங்கள் அங்கும் கூட இஸ்லாமிய போதனைகளைப் பற்றி உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அங்கும் மக்கள் வந்திருந்தனர். கனடாவின் பொறுப்பாளர்களுக்கும் நல்ல தொடர்பு உள்ளது. சாதாரண மக்களுக்கும் தொடர்பு உள்ளது. முதலிலேயே உருவான தொடர்பு மட்டுமல்ல. தொடர்பு அதிகமாகிக் கொண்டே செல்கிறது. நான் கூறியதை நினைவில் கொள்ளுங்கள். இந்த தொடர்பின் காரணமாக எவரும் எந்த இளைஞரும் தமது சுய திறமை என்று கருத வேண்டாம். அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் பற்று, தூய்மையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நான் கடந்த குத்பாவில் அவர்களின் நிர்வாகத்திலுள்ள சில குளறுபடிக்காக சிறிது கோபத்தை வெளிப்படுத்தியிருந்தேன். ஜமாஅத் அன்பர்களிடம் சந்திப்பு நிகழ்ந்த போது அவர்கள் அழுதழுது மன்னிப்புக் கேட்டனர். கடிதங்களின் மூலமும் மன்னிப்புக் கேட்டனர். ஆனால் நான் கோபப்பட்டது அந்தக் குறிப்பிட்ட துறைகளைப்பற்றி மட்டும்தான். ஜமாஅத்தின் தனி நபர்கள் மீது கோபப்படவில்லை. ஜமாஅத் நபர்களைப் பற்றிய விசுவாசத்தினால் தான் அவர்களைப் பற்றி நான் கருத்தில் கொள்ளாமல் இருந்தால் இந்த ஜல்ஸாவை அமெரிக்காவுக்கு மாற்றியிருப்பேன். எனவே, ஜமாஅத் அன்பர்களிடம் எனக்கு எந்த முறையீடும் இல்லை. ஆம்! ஜல்ஸாவின்போது சில தவறுகள் ஏற்படும். பொறுப்பாளர்கள் தரப்பிலோ தனி நபர்கள் தரப்பிலோ நிகழலாம். அதுபோன்று பெண்கள் தரப்பிலிருந்து புகார் வந்துள்ளது. பெண்கள் பகுதியில் கூச்சல் அதிகமாக இருந்தது. அவர்கள் ஜல்ஸாவைக் கேட்கவில்லை என்ற புகார் வந்தது. இந்த எல்லா விசயங்களையும் பொறுப்பாளர்கள், டியூட்டி கொடுக்கும் ஆண், பெண்கள் சரியான கவனத்துடன் பணியாற்றுவதன் மூலம் சரிசெய்ய முடியும். மன்னிப்பு கேட்பதாயின் பொறுப்பாளர்களும் டியூட்டி கொடுப்பவர்களும் தான் மன்னிப்பு

கேட்க வேண்டியதிருந்தது. அவர்களுக்கு கவனம் இல்லை. பொதுவான அஹ்மதி ஆண், பெண்கள் நான் கோபத்தைக் காட்டியதற்காக நிம்மதியிழந்துள்ளனர்.

அல்லாஹ்வின் அருளால் கனடா ஜமாஅத்தின் பற்று, தூய்மையைப் பார்த்து அல்லாஹ்வின் ஹம்து – ஆல் உள்ளம் நிறைகிறது. எத்தகைய மக்களை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். இது எத்தகைய அன்புக்குரிய ஜமாஅத்? இதில் கிலாஃபத்துடன் உள்ள அன்பும் எல்லையை தொட்டுள்ளது. தினமும் Peace Village பொலிவுடன் காணப்பட்டது. சிறிது காலமே இருந்தது. ரமலான் வரவிருந்தது. இவர்களின் பற்று, விசுவாசத்தைப் பார்த்து இன்னும் சில நாட்கள் தங்குவதற்கு உள்ளம் விரும்பியது.

அல்லாஹ்வின் அருள்களில் ஒன்றான ஜல்ஸா நடக்கும் இடங்களில் சில நிர்வாக ரீதியான சிக்கல்கள் வருகின்றன. பார்கிங்கிற்கு பெரும் நெருக்கடி ஏற்படுகிறது. கனடா ஜமாஅத் விரிவான இடம் உருவாக்குவது குறித்தும் சிந்திக்க வேண்டும். எவ்வாறு நிர்வகிப்போம் என்று கவலைப்பட வேண்டாம். அல்லாஹ் தேவையை அதிகரிக்கும் போது ஏற்பாட்டையும் அவனே செய்வான் இன்ஷா அல்லாஹ். நிபந்தனை என்னவெனில், உண்மையான நன்றி செலுத்தும் அடியாராகுங்கள். ஹம்து செய்யும் அடியாராகுங்கள்.

இன்னொரு விசயமும் கனடாவிலுள்ளவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன். கனடாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி இங்கும் கூட வருகின்றனர். பாகிஸ்தான் அகதிகள் அடைக்கலம் தேடி இங்கு அதிகமாக வந்துள்ளனர். அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் நமக்கு அருள் புரிந்துள்ளான். அவனது அருள்களை மேலும் ஈர்க்க உங்களை உலகில் தொலைத்து விடுவதற்குப் பதில் அல்லாஹ்வுடன் இணையுங்கள். அவனது கட்டளைகளை முன்னிறுத்துங்கள். அவனது திருப்தியை முன்னிறுத்துங்கள். இளைஞர்கள் குறிப்பாக நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அருளுக்கு எந்த அளவுக்கு நன்றி செலுத்தியவாறு அவனுக்கு ஹம்து செய்வீர்களோ அந்த அளவுக்கு அவனது அருளும் அதிகரித்துக் கொண்டே செல்லும். பாகிஸ்தானிலிருந்து கஷ்டத்தினால் இங்கு வந்தவர்கள் எப்போதும் அந்தக் கஷ்டங்களை நினைவில் கொள்ளுங்கள். அப்போது இறைவனும் எப்போதும் நினைவில் கொள்வான். புதிதாக வந்தவர்களுக்கு எப்போதும் உங்களது நல்ல முன்மாதிரியைக் காட்ட வேண்டும். ஆனால், ஆணாயினும் பெண்ணாயினும் சரி அல்லாஹ்வின் அருளுக்குரிய வாரிசாகுங்கள். எப்போதும் இதனை நினைவில் கொள்ளுங்கள். இங்கு வந்தது உலக நோக்கத்திற்காக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக மார்க்கத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்னும் சில நாட்களுக்குள் இன்ஷா அல்லாஹ் ரமலான் ஆரம்பமாகிறது. அமெரிக்கா கனடாவில் ஒருவேளை நாளைஆரம்பமாகலாம். இந்த ரமலானிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியும் நன்றாக பயனடைய வேண்டும். உங்கள் துஆ மற்றும் இபாதத்தை இறுதி எல்லை வரை கொண்டு செல்ல வேண்டும். இந்த நாள் இறைவனின் அருளை ஈர்க்கும் நாளாகும். இதிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியும் பயனடைய முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் அதற்கு தவ்ஃபீக் வழங்குவானாக! நாம் அல்லாஹ்வின் அருளை முன்னரை விட அதிகமாக நம் மீது இறங்கிக் காண்போமாக! அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

இப்போது நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரு ஜனாஸா தொழுகை தொழுவிப்பேன். ஒன்று, நமது ஷஹீது. இவர் நேற்று ஷஹீதாக்கப்பட்டுள்ளார். இவர் சவுத்ரி நயீம் அஹ்மது கோந்தல். இவர் சவுத்ரி அப்துல் வாஹித் சாஹிப் உடைய மகன் ஆவார். ஓரங்கி டவுண் கராச்சி மாவட்டம். இவர் நேற்று தான் ஷஹீதாக்கப்பட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது தாதா முகர்ரம் குர்ஷித் ஆலம் சாஹிப் மர்ஹூம் ஆவார். ஷஹீத் மர்ஹூம் 1965 –ல் பிறந்தார். சர்கோதாவின் வட பகுதியில் வசித்து வந்தார். பிறகு 1971 –ல் கோந்தல் பகுதிக்கு இடம் மாறினார். பிறகு கராச்சியின் ஓரங்கி டவுனுக்கு வந்தார். 1914–ல் இவரது தாதி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது கையில் பைஅத் செய்திருந்தார். தாதா பிறகு பைஅத் செய்தார். ஷஹீது மர்ஹூம் எம்.ஏ. பொருளியலில் எம்.பி.ஏ வரை படித்தவர். ஸ்டேட் பாங்க் ஆஃப் பாகிஸ்தானில் அஸிஸ்டன்ட் டைரக்டராக இருந்தார். இவரது ஷஹாதத் சம்பவம் இவ்வாறாகும். 19ம் தேதி காலை 8.15 மணிக்கு பாங்கிற்கு செல்வதற்காக வீட்டை விட்டு வெளியில் வந்தார். வீட்டிற்கு முன்னால் உள்ள ஒரு குறுகிய தெருவில் நுழைந்து செல்வார். அங்கிருந்து அவரை பாங்க் காரில்

அழைத்துச் செல்லும். இவர் தெருவில் நுழைந்ததும் மறைவிலிருந்து இரு இளைஞர்கள் இவரது நெற்றிப் பொட்டில் சுட்டார்கள். வலது புறம் நுழைந்த தோட்டா இடது புறம் வெளி வந்தது. நயீம் அஹ்மது கோந்தல் சாஹிப் அந்த இடத்திலேயே ஷஹீதாக்கப்பட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

11 வருடமாக இவர் சதர் ஹல்கா ஓரங்கி டவுண் ஆக இருந்தார். அதற்கு முன் நான்கு வருடங்கள் மஜ்லிஸ் ஓரங்கியின் காயித் ஆகவும், அதற்கு முன் ஸயீம் ஹல்கா வக்ஃபே நவ் செயலர், முரப்பி அத்ஃபால் போன்ற பல பொறுப்புகளை வகித்தார். மிகவும் இனிய சுபாவம் உடையவர். எளிமையானவர். இவரது பகுதியில் வசிப்பவர்களும் இதே கருத்தை கூறினர். சில காலமாக ஓரங்கி டவுண் பகுதியின் நிலைமை மோசமாக உள்ளது. சுவரொட்டி பிரச்சாரம் நமக்கு எதிராக இருந்து வந்தது. மிகவும் தைரியமாக அதனை எதிர்கொண்டவர். வீரமுள்ள மனிதராக இருந்தார். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார். அஹ்மதி அல்லாத சிலர் இரங்கல் தெரிவிக்க வந்தபோது அவர்கள் இதையே கூறினர். இங்கும் பல வருடங்கள் ஜல்ஸாவுக்கு வந்துள்ளார்கள். அவர் தங்கியிருந்த வீட்டுவாசிகளின் குழந்தைகள் சொன்னார்கள். ஜல்ஸாவின் விருந்தினர் தவிர எங்களது வீட்டில் இருந்த விருந்தினருக்கும் சேவை செய்வார். அவரது எளிமை எந்த அளவுக்கு இருந்தது எனில் Shoe Polish செய்யும் போது விருந்தினர்களின் பூட்ஸ்களையும் பாலிஸ் செய்வார்.

ஒருமுறை ஜல்ஸாவுக்கு விருந்தினர் வந்திருந்தனர். அப்போது மழை அதிகமாக இருந்தது. வீட்டினர் தமது Shoe –க்களை கழற்றி வைத்தனர். அனைத்து சேறு சகதிகளால் நிறைந்திருந்தது. காலையில் பார்த்த போது எல்லாரது Shoe –வும் சுத்தமாக இருந்தது. வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. இரவில் இவரது வீட்டிலிருந்த எல்லா விருந்தினர்களின் Shoe –வின் மண்ணையும் துடைத்து சுத்தம் செய்து கழுவி பாலிஸ் செய்து வைத்திருந்தார். இது அவரது இயல்பாகும்.

இவருக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. ஆனால் மனைவியும் கூட கூறுகிறார். எனது தந்தை, தாயும் கூட எனது வாழ்வில் என்னை இப்படி கவனமாகப் பார்த்ததில்லை. இவர் அந்த அளவுக்கு எனக்கு சவுகரியம் வழங்கினார். மர்ஹூமின் தகுதியை அல்லாஹ் உயர்த்துவானாக! உயர்த்திக் கொண்டே செல்வானாக! இந்த கடினத்தின் நாட்களை அல்லாஹ் விரைவில் பாகிஸ்தானில் முடிவுக்கு கொண்டு வருவானாக! நான் ஏற்கனவே கூறியது போன்று அதிகமாக துஆவில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக ரமலானில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக உலகில் எல்லா இடங்களிலும் உள்ள அஹ்மதிகள் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த கடினமான நாட்களை மாற்றுவானாக!

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய சாஹிப் ஸாதா ஹபீஸ் அஹ்மது சாஹிப். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் மகன் ஆவார். 86 வயதில் இவர் வஃபாத் ஆகி உள்ளார். 14–15 நாட்களின் இரவில் இறந்தார்கள். உம்மே நாஸிரின் வயிற்றில் பிறந்தவர். மென்மையாக பேசுபவர். ஏழைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவராக இருந்தார்கள். மவ்லவி பாஸில் தேர்வில் தேறிய போத சிந்துவில் உள்ள சிண்டிகேட் பகுதிக்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அனுப்பினார்கள். அங்கேயே பணி செய்து கொண்டிருந்தார். பிறகு அது நிறுத்தப்பட்டதும் சொந்தத் தொழில் செய்தார். கிலாஃபத்துடன் நல்ல தொடர்பிருந்தது. எனக்கும் முறையாக கடிதம் எழுதி வந்தார். நல்ல தூய்மையான பற்று உடைய தொடர்பை வெளிப்படுத்தினார். எனது மாமா ஆவார்கள். அல்லாஹ் இவர்களது பதவியை உயர்த்துவானாக! இவர்களுடன் மக்ஃபிரத்துடனான நடைமுறையை காட்டுவானாக! தொழுகைக்குப் பிறகு நான் கூறியது போன்று இவர்களின் ஜனாஸா தொழுகை நடைபெறும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 20.07.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456